எம்.சி.ஓ.பி எண்: 4504/2025 தேதி: 08.07.2026

மசா. : 2

பெயர் : ஆனந்த் பாபு

த/பெ. : கர்ணன்

வயது : 37

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஆட்டோ ஓட்டுநர் என்பதற்கு ஆவணம்தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. விபத்து சமயத்தில் விபத்து நடந்த இடத்தில்நான் இருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் ஆட்டோவின் பதிவெண் TN–12–BA–7564. நான் ஆட்டோ ஓட்டுநர் சங்க உறுப்பினர் என்பதற்கு உறுப்பினர் அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை. விபத்து 01.06.2025 அன்று விபத்து நடந்தது. இருசக்கரவாகனத்தில் விபத்தின் போது இருவர் வந்தார்கள். அதன் பதிவெண் TN–36–AD–0200. அவர்கள் இருவரும் தலைக்கவசம் அணிந்திருந்தார்கள். மனுதாரர்கள் எனக்கு யார் என்று தெரியாது. மனுதாரர் வாகனம் எந்த வாகனத்தின் மீது மோதவில்லை. அந்த இருசக்கரவாகனத்தில் மனுதாரர் பின் பக்கத்தில் அமர்ந்திருந்தார். பூந்தமல்லி பைபாஸ் சாலையில் சென்னீர் குப்பம் என்ற இடத்தில் விபத்து நடந்தது. இரும்பு காரீடர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் விபத்து சமயத்தில் அங்கு இருந்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. இறந்துபோனவரின் அப்பா அழைத்ததன் பெயரில் சாட்சி கூற வந்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் தரவில்லை. நான் காயம்பட்டவருடன் மருத்துவமனைக்கு செல்ல வில்லை. நான் 15 வருடமாக ஆட்டோ ஓட்டிவருகிறேன். எனக்கு சாலையின் விதிகள் தெரியும். நான் இந்த வழக்கில் முதன் முதலாக சாட்சி அளிக்கிறேன். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சம்பவ இடத்தில் இருந்ததற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் விபத்தை பார்க்காததால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.